*பிரஸார் பாரதி*

*அகில இந்திய வானொலி, சென்னை - 4*

*11 03 2026 WEDNESDAY* *6 30 PM*

*வணக்கம் - மாநிலச் செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *தமிழகத்தின் வளர்ச்சிக்காக, மத்திய அரசு அயராது பாடுபட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

- *தமிழகத்தின் மேம்பாட்டிற்காக இதுவரை 13 லட்சம் கோடி ரூபாயை பிரதமர் வழங்கியுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

- *மேற்காசியாவில் சிக்கியுள்ள தமிழர்களை பாதுகாப்பாக அழைத்து வர தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறத்தியுள்ளார்.*

- *பள்ளி மாணவர்களின் ஆரோக்கியத்தில் கூட திமுக அரசு அக்கறையின்றி செயல்படுவதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.*

- *டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரிவசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் சர்மா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.*

*>>>>><<<<<*

*தமிழகத்தின் வளர்ச்சிக்காக, மத்திய அரசு அயராது பாடுபட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*இன்று திருச்சியில் 5 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்த பிரதமர், தமிழில் ''வணக்கம்'' என்று கூறி, உரையை தொடங்கினார்.*

*(சவுண்ட் பைட் - பிரதமர் (1) 68 செகண்ட்ஸ்)*

*இன்று தொடங்கி வைக்கப்பட்ட திட்டங்கள், தமிழகத்தின் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் கூறினார்.*

*இந்த திட்டங்கள் மூலம் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.*

*இந்த விழாவில் வரவேற்புரையாற்றிய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், கடந்த 12 ஆண்டுகளில் தமிழகத்தின் வளர்ச்சிக்காக 13 லட்சம் கோடி ரூபாயை பிரதமர் வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - எல். முருகன் 52 செகண்ட்ஸ்)*

*இந்த நிகழ்ச்சியை தொடர்ந்து, தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுக்கூட்டத்தில் திரு. நரேந்திர மோடி தற்போது பங்கேற்றுள்ளார்.*

*>>>>><<<<<*

*மக்களவைத் தலைவருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்துள்ளது துரதிருஷ்டவசமானது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்*

*இன்று மக்களவையில் இந்த தீர்மானம் மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.*

கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்குப் பிறகு, மக்களவைத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, இதுவரை மக்களவைத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்த தில்லை என்று அவர் கூறினார்.

மக்களவைத் தலைவரின் நேர்மை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>><<<<<

மேற்காசியாவில் சிக்கியுள்ள தமிழர்களை பாதுகாப்பாக அழைத்து வர தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்

இதுதொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் ஈரானில் உள்ள தீவுகளில் சிக்கித் தவித்து வருவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்களின் பாதுகாப்பையும், அவர்கள் தாயகம் திரும்புவதையும் மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தல், ஒரு குடும்பத்தின் பிடியிலிருந்து மக்களை காப்பாற்றுவதற்கான தேர்தல் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று திருச்சியில், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமியுடன் ஆலோசனை நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தமிழகத்தின் பெருமையை பாதுகாப்பதற்கான தேர்தல் இது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றிபெறும் என்றும் திரு. பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>><<<<<

பள்ளி மாணவர்களின் ஆரோக்கியத்தில் கூட திமுக அரசு அக்கறையின்றி செயல்படுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கோவை மாவட்டத்தில் வழங்கப்பட்ட தரமற்ற மதிய உணவால், அரசு பள்ளி மாணவர்கள் 43 பேர் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பது, அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உரிய சிகிச்சை கிடைப்பதை திமுக அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சத்துணவு போன்ற முக்கிய திட்டத்தில் அரசு எவ்வாறு தொடர்ந்து அலட்சியமாக செயல்பட முடியும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் வினவியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

*சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், செங்கல்பட்டு மாவட்டம், அத்திவாக்கம் பகுதியில் 14 வயது சிறுமி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக வெளியான செய்தி அதிர்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இதைப்பற்றி கவலைப்படாமல் நாள்தோறும் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் விழாக்களில் பங்கு பெற்று வருவதாக அவர் குறை கூறியுள்ளார்.*

*தேர்தல் தோல்வி பயம் காரணமாக, மக்களின் கவனத்தை திசை திருப்பும் நடவடிக்கையில் ஈடுபடுவதால், சட்டம் ஒழுங்கை பராமரிக்க முடியாத சூழல் ஏற்பட்டு விட்டதா என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.*

*>>>>><<<<<*

*ஈரோடு மாவட்டம், கடம்பூர் மலைப்பகுதியில் யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார்.*

*கடம்பூர் - தாளவாடி பகுதிகளில் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் யானை தாக்கியதில் 3 பேர் உயிரிழந்த தாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - மூர்த்தி 30 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*மாவட்டச் செய்திகள்*

*திண்டுக்கல்லில் புதிய பூங்கா அமைப்பதற்கான பணிகளை மாநில அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி இன்று தொடங்கி வைத்தார்.*

*>>>>><<<<<*

*திருவண்ணாமலை மாவட்டத்தில் பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில், துணை ராணுவப் படையினரின் கொடி அணிவகுப்பு இன்று நடைபெற்றது.*

*>>>>><<<<<*

*கடலூர் மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்வது தொடர்பான விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை, ஆட்சியர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று தொடங்கி வைத்தார்.*

*>>>>><<<<<*

*திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில், பொதுமக்கள் குறைதீர் கூட்டம் இன்று நடைபெற்றது.*

*>>>>><<<<<*

*விளையாட்டுச் செய்திகள்*

*டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரிவசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் சர்மா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.*

*Ishan Kishan இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*உலக கோப்பை மகளிர் ஹாக்கி தகுதிச் சுற்று போட்டியில், இந்தியா இன்று Wales அணியை எதிர்கொள்கிறது.*

*ஹைதராபாதில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.*

*>>>>><<<<<*

*ஆசிய கோப்பை இரண்டாம் கட்ட வில்வித்தை போட்டி, தில்லியில் அடுத்த ஆண்டு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>END<<<<<*